1982 பிப்ரவரி 17]

வரவேற்கத்தக்கது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் ஆம்பூரில் இப்படிப்பட்ட ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டு, நான்கூட அதிலே கலந்து கொண்டேன். இத்தகைய முயற்சியை நான் வரவேற்கிறேன். அரசு அதற்கு ஆதரவு தரும்.

சென்னை சட்டக்கல்லூரியில் மாலை நேர எம் எல், பட்டபடிப்பு வகுப்பு தொடங்கும் திட்டம்

*வினா எண்.—228 திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர்: கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை சட்டக் கல்லூரியில் மாலைநேர எம். எல். பட்டப்படிப்பு வகுப்பு நிறுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை மீண்டும் தொடங்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) 1979-80ம் வருடம் முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

(ஆ) எம். எல். பட்டப்படிப்பு முழு நேரமாக ஆக்கப்பட்டதால் மீண்டும் மாலை நேர வகுப்புகள் தொடங்க பல்கலைக் கழகத்திற்கு இப்போதைக்கு உத்தேசமில்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே, எம்.எல். பட்டப்படிப்பு ரெகுலர் காலேஜில் இரண்டுமணி நேரம் தான் நடக்கிறது. ஆகவே, தொழில் நடத்துகிற வழக்கறிஞர்கள், தலைமைச் செயலகத்தில் பணியாற்றுகின்றவர்கள், மற்றும் பணியில் இருக்கிறவர்கள் படிப்பதற்கு ஏற்றவகையில் இப்போது கற்பிக்கும் நேரத்தை மாற்றி, மாலை 5.00 மணிக்கு அந்த வகுப்பை நடத்த ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இரண்டு மணி நேரம் என்பது பகுதி நேரப்படியாக வைக்கப்பட்டிருப்பது ஒரு காரணமாக இருந்தாலும்கூட படிக்கின்றவர்கள் தங்களுடைய முழு நேரத்தையும் இந்தக் கல்விக்காகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்பது இதில் இருக்கிற ஒரு முக்கியமான அடிப்படை. அந்த முறையில்தான் பார் கவுன்சில் தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு, நமக்கு யோசனை சொல்லியிருக்கிறது; அதை நாம் செய்து கொண்டிருக்கிறோம். இருந்தாலும் வேலையில் இருக்கிறவர்கள் படித்தால் நல்ல முறையில் இருக்கும், மாணவர்கள் முழுமையாக இரண்டு மணி நேரம் படிப்பதாவது பணியில் இருப்பவர்கள் பகுதிநேர படிப்பாக படிப்பதைவிட சிறந்ததாக இருக்குமா என்பது கேள்விக் குறியாக இருக்கிறது. ஆகவே, பகுதிநேர பட்டப்படிப்பு படிக்கிறவர்களுக்கு வாய்ப்புத் தரவேண்டுமென்று பார் கவுன்சிலுக்கு எழுதியிருக்கிறோம்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: தலைவரவர்களே, மாலைநேர சட்டக் கல்வியை திருச்சி, மதுரை, கோவை சட்டக் கல்லூரி களிலும் ஆரம்பிக்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம். தலைவரவர்களே, மாலை நேர வகுப்புகளை நடத்தக்கூடாது என்பது பார் கவுன்சில் விருப்பமாகும். ஆகவே, பார் கவுன்சில் விருப்பத்தை மாற்றிய பிறகுதான் மதுரை, திருச்சி, கோவை என்று வரும். அதற்கு முன்னால் அதைப்பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை.

திரு. வேடசந்தூர் வி. பி.பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே, ஆசிரியர் தொழிலில் இருக்கிறவர்கள் பயிற்சி அளிக்கின்ற தொழிலில் இருக்கின்ற காரணத்தால் அவர்கள் எம்.ஏ., எம். எஸ்ஸி. படிப்புக்கு நேரடியாகச் செல்லலாம் என்று பல்கலைக் கழகம் அமைத்திருக்கிறது. அந்த அடிப்படையில் சட்டம் இயற்றுகின்ற சட்டமன்றத்தில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களும், சட்டத் துறையில் பணியாற்றுகின்றவர்களும் அரசியல் சட்டம் (கான்ஸ்டிடியூஷனல் லா) என்ற பிரிவில் நேரடியாக எம்.எல். எழுத அரசு அனுமதிக்குமா; அதுபற்றி பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, பகுதி நேர படிப்பாக நடத்தலாம் என்ற முடிவை அறிவித்த பிறகு தான் இதுபற்றிய பரிசீலனையே வரும்.

திரு. உ. சுப்பிரமணியன்: தலைவரவர்களே, எம்,எல்,பட்டப் படிப்புக்கு உண்மையிலேயே திறமையானவர்கள், அறிவு மிக்கவர்கள்தான் செல்ல முடியும். மேல் நாடுகளில் 'learn while you earn' என்று சொல்வார்கள். அந்த முறையில் இங்கேதான் பகுதி நேரப் படிப்பை ஏற்படுத்திக் கொடுத்தால் திறமைசாலிகளுக்கு அது ஒரு வாய்ப்பாக இருக்கும். அதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இது பற்றி பரிசீலனை செய்ய வேண்டிய அமைப்பு பார் கவுன்சில். அவர்களை பரிசீலனை செய்யச் சொல்லி நம்முடைய சட்டக் கல்வி இயக்குநர் எழுதி இருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தையும் யார் பரிசீலிக்க வேண்டுமோ அவர்களுடைய கவனத்திற்கு அரசு கொண்டு வரும்.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, வழக்கறிஞர் களுடைய அமைப்பு இந்த மாலை நேரக் கல்வியைத் தடுக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். நான் கேட்க விரும்புவது இன்றைக்கு வேலையில் இருப்பவர்களும், வேலையில் இல்லாத வர்கள் அதிகமான அளவிலும் இருக்கிற ஒரு காலத்தில் நாம் இருக்கிறோம். மாலை நேரக் கல்வியை இன்றைக்கு பார்

கவுன்சில் தடுக்கிறது என்றால் அதன் நோக்கம் என்ன? வேலையில் இருக்கிறவர்கள் தடை செய்கிறார்கள் என்பதற்காக அரசு ஏன் அதைத் தடுக்க வேண்டுமென்று கேட்க விரும்புகிறேன்.

(முற்பகல் 9.40)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இது தொழில் சம்பந்தமானது. தொழில் பற்றிய ஒரு உயர்ந்த அமைப்பாக பார் கவுன்சில் இருக்கின்றது. அவர்கள் பார்த்து இப்படிப்பட்டவர்கள்தான் வழக்கறிஞர்கள் தொழில் செய்ய முடியும் என்று சொல்லக்கூடிய உரிமையையும் அதிகாரத்தையும் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் எப்படிப் பட்டவர்கள் இந்தத் தொழிலைப் புரிய முடியும் என்று சொல்கிறார்கள். அல்லது அப்படிப் படித்தால்தான் அந்தப் பட்டத்திற்கு மதிப்பு இருக்கும் என்றும் இல்லை என்றால் அந்த மரியாதை அந்தப் பட்டம் தராது என்றும் சொல்கிறார்கள். ஆகவே இப்போது நாம் அந்தத் தடையை எடுக்க வேண்டும் என்று கேட்டிருப்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்ற அந்தக் கருத்தை அரசு ஏற்றிருக்கின்றது என்பதுதான். ஆகவே நாம் ஏற்றிருக்கிறோம். இதுபற்றி அவர்களைக் கேட்டிருக்கிறோம்.

திரு. மி. வின்சென்ட்: தலைவரவர்களே, எம். எல். படித்த வழக்கறிஞர்கள் பொதுவாக அரசிடம் வேலை கேட்டதில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் என்ற பேச்சுக்கே இடம் இல்லாத இத்தகைய மேற்பட்டப் படிப்புகளைப் படிக்கின்ற வாய்ப்பின் எண்ணிக்கையை அதிகமாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, நான் ஏற்கனவே, தெரிவித்த பதிலில் அரசு அதற்கு முன்வந்திருக்கின்றது என்று கூறினேன். ஆனால் அதற்கு அனுமதி தர வேண்டியவர்கள் தர வேண்டும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவரவர்களே, மாலை நேரக் கல்லூரியை இங்கே அனுமதிப்பதிலே சங்கடம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் மைசூர், மகாராஷ்டிரா போன்ற அண்டை மாநிலங்களிலே தபால் மூலமாகவும் கல்வி போதிக்கப்படுகிறது. மாலை நேரக் கல்வியின் மூலமும் இந்தக் கல்வி போதிக்கப்படுகின்றது. ஆகவே அங்கே இருப்பவர்கள் அனுமதிக்கின்ற சூழ்நிலை இருக்கின்றபோது இங்கேயும் மாலை நேரக் கல்லூரியின் மூலமாகவும் தபால் மூலமாகவும் அந்தக் கல்வியைக் கற்பதற்குரிய வகையிலே அந்த அதாரிட்டிக்கு ஆலோசனையை ஏன் கூற முடியாது என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, மாலை நேரக் கல்லூரியிலே படிக்க வேண்டும் என்ற கருத்தை அரசு ஏற்றுக் கொண்டுதான் அரசின் சார்பாக கல்லூரி இயக்குநர் அந்த வழக்கறிஞர்கள் சங்கத்திற்கு எழுதி இருக்கிறார். அவர்கள் அனுமதி தந்தவுடன் நாம் அதைப்பற்றி நடவடிக்கை எடுக்க முடியும்.

தமிழ்நாட்டில் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை நிறுவும் திட்டம்

*வினா எண் 229 திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உற்பத்தியாளர் கூட்டுறவு ஸ்தாபனங்களை நிறுவுவது பற்றிய திட்டம் தமிழக அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இதுபற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) மற்றும் (ஆ): தற்பொழுது செயல்பட்டு வரும் ஆதாரக் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களே, இவற்றின் பெயரை "விவசாய உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்கள்" என மாற்றியமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே, பரிசீலனை நீண்ட காலமாக நீடித்துக்கொண்டிருக்கின்றது, எனவே சீக்கிரமாக முடிவு எடுத்து அதை அமல் நடத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, இந்தப் பரிசீலனை நீண்ட நாட்களாக இல்லை. சென்ற செலக்ட் கமிட்டியின் கூட்டத்தில்தான் இதுபற்றி யோசனை செய்யப்பட்டு தற்போது 20 நாட்களுக்கு முன்புதான் இதுபற்றிய முடிவான நிலைக்கு வந்திருக்கிறோம், மாண்புமிகு உறுப்பினர்கள் தமிழ்நாட்டில் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத நிலைமை இருப்பதாகக் கருதக் கூடாது. பெயர் மாற்றம்தான் செய்யப்படுகிறது. Cooperative marketing Societies are only producers Cooperative societies ஏற்கெனவே அந்த விதியில்தான் அவை செயல்பட்டுக் கொண்டு வருகின்றன. அப்படி 115 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இருக்கின்றன. பெயர்தான் விற்பனைச் சங்கங்கள் என்று இருக்கின்றதே தவிர, செயல், ஆப்ஜெக்ட்ஸ் ஆகிய அனைத்திலும் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கங்களாகத்தான் இருக்கின்றன. இப்படி 115 கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கங்கள் தமிழ்நாட்டில் ஏற்கெனவே இருக்கின்றன.